**2026 மார்ச் மாதம் 02– ஆம் தேதி திங்கட்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 7/2016**

O.S. No.: 7/2016 – அழகேசன் DW1 02.03.2026

த/பெ.அழகர்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது எனது தந்தை அழகர்சாமியின் பெயர் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தையின் பெயரில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுவதற்கு நான் என்ன ஆவணம் தாக்கல் செய்தேன் என்றால் எனது அப்பா பெயரில் உள்ளது, எனது பெயரில் மாற்றப்பட்டது, நான் ஆவணம் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, பட்டா, சிட்டா எனது பெயரில் உள்ளது. பி.வா.சா.ஆ.1 ஏ பதிவேடு எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் தெரியாது. அந்த ஆவணத்தில் 152 பக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது பெரிய பதிவேடு என்றால் சரிதான்.

2. அந்த ஆவணத்தில் செட்டில்மென்ட் சம்பந்தமாக எழுதப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அசல் ஆவணங்களை பார்த்தால் தான் எந்த மாதம், தேதி, வருடம் பி.வா.சா.ஆ.1 ஏற்பட்டது என்று தெரியும் என்றால் சரிதான், அந்த அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் அரசிடமிருந்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர்த்து தாவா சொத்து எனக்கு சொந்தம் என்பதை காட்டுவதற்கு வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எவ்வளவு விஸ்தீரணம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 1 ஏக்கர் 94 செண்ட் ஆகும். தாவா சொத்துக்களை நானும், சுப்பையாவும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக வா.சா.ஆ.6–ல் ஏற்கனவே நாகப்பக்கவுண்டர் மற்றும் கெப்பணக்கவுண்டர் பெயரில் சர்கார் கிராமத்தை எடுத்துக்கொண்ட போது ஏ பதிவேட்டில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி ஆவணத்தை ரத்து செய்து பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டுள்ளதா என்றால் மேற்படி ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது.

4. வா.சா.ஆ.10 ஆவணமானது தாசில்தார் அலுவலகத்திலிருந்து எனது குடும்பத்திற்கும், சுப்பையா குடும்பத்திற்கும் பட்டா மாறுதல் ஏற்பட்டது என்றால் சரிதான், 1 ஏக்கர் நாங்கள் கொடுத்தோம். பட்டா மாறுதல் படி சங்கரலிங்க கவுண்டர் எனது அப்பா அழகர்சாமிக்கு 38 ஏர்ஸ் கொடுத்தார் என்றால் ஏர்ஸ் கணக்கு எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் உத்தரவு 10.07.1990ம் தேதியில் எனது குடும்பத்திற்கு ஏற்பட்டதா என்றால் எந்த தேதியில் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது, ஆனால் பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது.

5. 10.07.1990 மற்றும் 22.05.1990 ஆகிய தேதிகளில் பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. எனக்கும், சுப்பையாவுக்கும் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு என்னிடம் உள்ளது என்றால் பட்டா என்னிடம் உள்ளது. வா.சா.ஆ.10ல் சுப்பையா கவுண்டர் மக்கள் தொட்டப்பன், மணிகண்டன், சுரேந்தர், அழகர்சாமி மக்கள் மதுசூதனன், தாயார் அமிர்தவள்ளி ஆகியோர் பெயர்கள் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் தொட்டப்பன், அமிர்தவள்ளி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

6. அதில் சொல்லப்பட்டுள்ள பட்டா எண்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சுப்பையா கவுண்டரின் மூன்று வாரிசுகளுக்கு மட்டும் சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பையா பட்டா விசாரணைக்கு வந்தார் என்றால் இல்லை, இறந்துவிட்டார். பிரிவினை இரண்டு குடும்பத்திற்கும் இடையில் ஏற்பட்டது என்றால் எனது அம்மா உயிருடன் இருந்தபோது ஏற்பட்டது, எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.10 பட்டா விசாரணையில் நானும், சுப்பையா கவுண்டர் வாரிசுகளும் சூழ்ச்சி செய்து பட்டா பெற்றோம் என்றால் சரியல்ல.

7. மேற்படி பட்டா விசாரணைக்கு வாதி மாதவன் வந்திருந்தாரா என்றால் எனது தாயார் கொடுத்த செட்டில்மென்ட் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.6 ன்படி ஏற்பனவே சுப்பையாவிற்கு சொத்து உள்ளது என்றாலும், நான் 1 ஏக்கர் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் ஏற்பட்ட பிறகு பட்டா பாஸ்புக் வந்ததா என்றால் வந்தது. பட்டாவிற்கு பின்பு கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1 ஏக்கர் நிலத்தை தானமாக கொடுத்தது பொய் என்றாலும், 96 செண்ட் எனக்கு கிடைத்ததாக வாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. வாதியின் தந்தை சங்கரலிங்கம் பள்ளி ஆசிரியர் என்றால் சரிதான். சங்கரலிங்கம் வெற்றுப் பத்திரத்தில் கையொப்பம் போட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சங்கரலிங்கம் சாட்சி கையொப்பம் பத்திரத்தில் போட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சங்கரலிங்கம் நாங்கள் விற்பனை செய்த எழுதப்பட்ட பத்திரத்தில் கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல, கிரையம் வாங்கியவர்கள் உள்ளூரை சேர்ந்தவர்கள் மற்றும் ஒரே தெருவில் வசித்து வந்தவர்கள் ஆவார்கள்,

வாதியின் குடும்பத்திற்கு தெரியும். என்னால் தாவா சொத்து கிரையப் பத்திரங்கள் மோசடியாக தயார் செய்து, விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. சுப்பையா கவுண்டர் பட்டா விசாரணைக்கு முன்பே எந்த வருடத்தில் இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை எங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்டது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் தந்தையின் பூர்வீகச் சொத்து என்று சொல்லிவிட்டு தற்போது எனக்கு பங்கு உண்டு என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12–ல் எனது தந்தை அழகர்சாமி த/பெ.சங்கரலிங்கம் பக்கத்தில் Ryot என்று ஆங்கிலத்தில் உள்ளது என்றால் அவருக்கு ஆங்கிலம் தெரியுமா என்று எனக்கு தெரியாது.

10. தாவா சொத்தில் நான் சொல்வதுபோல் கட்டிடங்கள் கிடையாது என்றாலும் 1995 ம் ஆண்டு முதல் கட்டிடங்கள் கட்டப்படவில்லை என்றால் சரியல்ல, கட்டிடங்கள் உள்ளன. சுப்பையா கவுண்டரின் வாரிசுகளை கையடக்கம் செய்துக்கொண்டு வருவாய்துறை அலுவலர்களை என் வசம் கையடக்கம் செய்துக்கொண்டு ஆவணம் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 10 பிரதிவாதிகள் எனக்கு ஆதரவாக இருப்பதால் இவ்வழக்கில் கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சுப்பையா கவுண்டர் குடும்பத்திற்கும், வாதி குடும்பத்திற்கும் சொந்தம் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.03.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.02 16:25:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.03.2026.